Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.677/2019

**Depositions of PW-3**

| Name | திரு.செந்தில்முருகன் | Occupation | வனவர் |
| --- | --- | --- | --- |
| Father's name | வேல்முருகன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of July 2025.

02.07.2025

எதிரிகள் ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆனைமலை புலிகள் காப்பகத்தில் திருப்பூர் வனக்கோட்டத்தில் வனவராக பணிபுரிகிறேன். கடந்த 13.03.2019 அன்று காலை 09.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் பிரிவு வனவராகிய நானும் திருவில்லிபுத்தூர் பிரிவு ரெங்கர் கோவில் சுற்று வனக்காப்பாளர் திரு.வி. சண்முகராஜ் என்பவரும் இருவரும் இணைந்து மேற்படி ரெங்கர் கோவில் சுற்றில் தலையணைப்பாறை சராகம் மற்றும் ராமக்கல் சராகம் ஆகிய சராகங்களில் இணைந்து தணிக்கை செய்து வரும் போது பேயணை ஓடைப்பகுதியில் சுமார் 12.00 மணியளவில் தணிக்கை செய்து கொண்டிருக்கும்போது அப்பகுதியில் டிராக்டர் சத்தம் கேட்டு அப்பகுதியை நோக்கி சென்று கொண்டிருக்கும்போது எங்களை நோக்கி காப்புக்காட்டிலிருந்து டிராக்டர் ஒன்று வந்ததைப் பார்த்து தடுத்து நிறுத்த முற்படும்போது டிராக்டரிலிருந்த இருவரில் ஒருவர் தப்பியோட மற்றொருவரை நாங்கள் இருவரும் ஒரு டிராக்டர் மற்றும் பதிவெண் அழிந்த நிலையிலிருந்த டிரெய்லரை பிடித்து பரிசோதனை செய்ததில் சுமார் 1/2 யூனிட் மணல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. டிராக்டரை பிடித்து பாண்டியராஜனை விசாரணை செய்ததில்

அவர் பேயணை ஓடை பகுதியிலிருந்து மணலை எடுத்து வந்ததாக கூறி எங்களையும் அந்த இடத்திற்கு கூட்டிச்சென்று காட்டினார். அவரிடம் டிராக்டரிலிருந்து ஓடிய மற்றொரு நபரின் பெயரை பற்றி கேட்டபோது அவர்தான் டிராக்டரின் உரிமையாளர் என்றும் அவர் பெயர் கோவிந்தராஜ் என்றும் கூறினார். பாண்டியராஜ் என்பவரை அழைத்துக்கொண்டு அவர்கள் மணலை எடுத்து வந்ததாக சொல்லப்பட்ட இடத்திற்கு சென்று ஜிபிஎஸ் மூலம் அந்த இடத்தையும் புகைப்படம் எடுத்தோம். அதன் பின்பு ஸ்தல மகஜர் சம்பவ இடத்தில் வைத்து என்னால் தயாரிக்கப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது. ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஸ்தல மகஜரில் இடதுபக்கம் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். பின்பு பாண்டியராஜனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று என்கைப்பட எழுதினேன். ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் இடதுபக்கம் முதலில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பின்பு பிடிபொருட்களையும் பாண்டியராஜனையும் வனச்சரக தலைமை அலுவலகத்திற்கு எடுத்து சென்றோம். அதன் பின்பு எதிரி பாண்டியராஜை காவல் அடைப்பு செய்வதற்காக திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, முன்பு ஆஜர் படுத்தி எதிரி காவல் அடைப்பு செய்யப்பட்டார்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.